ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ

அதி விசேஷமானது

අංක 2252/32 - 2021 නොවැම්බර් මස 03 වැනි බදාදා - 2021.11.03

*2252/32 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1987 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்***

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறிந்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்கு பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ** (பா. உ.).
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 ஆவது மாடிகள், "சுஹூறுபாய",
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை.
2021, ஒற்றோபர் 25.

1A – G 35269 – 25 (2021/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

கலவான நகர அதிகாரப் பிரதேசம்

**நிரல் - I**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் கலவான பிரதேச செயலக பிரிவினுள் அமைந்துள்ள இலக்கம் 195 குகுலேகம வடக்கு, இலக்கம் 197 B கொஸ்வத்த, இலக்கம் 196C தபாஸ்வரகந்த, இலக்கம் 196 கலவான மேற்கு, இலக்கம் 196E கலவான கிழக்கு மற்றும் இலக்கம் 197C வெம்பியகொட ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குச் சொந்தமான கலவான பிரதேசம் மற்றும் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்திற்குச் சொந்தமான நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை வரையறையாயக கொண்டதுமான முழு பிரதேசத்தினையும் உள்ளடக்கும்.

**நிரல் - II**

வடக்கு : அயகம – கலவான வீதியின் மத்திய கோடு குகுலேகம வடக்கு கிராம அலுவலர் பிரிவு வடக்கு எல்லை புள்ளியிலிருந்து தொடங்கும் அந்த எல்லையினூடாக கிழக்கு திசைக்கு கோலன்ன கால்வாயின் மத்திய கோட்டினை சந்திக்கும் திசைக்கு அந்த இடத்தில் இருந்து கோலன்ன கால்வாயின் மத்திய கோட்டினை சந்திக்கும் தென் கிழக்கு திசைக்கு பெகிரிமான் ஹேன்யாய கால்வாய் மத்திய கோட்டில் சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அந்த கால்வாய் மத்திய கோட்டினூடாக தென் கிழக்கு திசையிலிருந்து தபஸ்வரகந்த கிராம அலுவலர் பிரிவு வடக்கு எல்லையை சந்திக்கும் புள்ளி வரை, அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவு வடக்கு எல்லையினூடாக வடகிழக்கு திசைக்கு கலவான மேற்கு கிராம அலுவலர் பிரிவு, மேற்கு எல்லையை சந்திக்கும் புள்ளி வரை, அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவு மேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு எல்லையினூடாக வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு திசைக்கு கலவான கிழக்கு கிராம அலுவலர் பிரிவு வடக்கு எல்லையினூடாக சந்திக்கும் புள்ளி வரை, அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவு வடக்கு மற்றும் கிழக்கு எல்லையினூடாக கிழக்கு மற்றும் தெற்கு திசைக்கு கலவான - இரத்தினபுரி பிரதான வீதியின் மத்திய கோட்டினை சந்திக்கும் வரை;

கிழக்கு : கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து கலவான கிழக்கு கிராம அலுவலர் பிரிவு கிழக்கு எல்லையினூடாக தெற்கு திசைக்கு வெம்பியகொட கிராம அலுவலர் பிரிவு வடக்கு எல்லையினை சந்திக்கும் புள்ளி வரை, அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவு வடக்கு மற்றும் கிழக்கு எல்லையினூடாக தெற்கு திசைக்கு கொஸ்வத்த ஆற்றின் மத்திய கோட்டினை சந்திக்கும் வரை;

தெற்கு : கடைசியாக குறிப்பிட்ட புள்ளிலியிலிருந்து கொஸ்வத்த ஆற்றின் மத்திய காட்டினூடாக மேற்கு திசைக்கு கலவான வெத்தாகன பிரதான வீதியின் மத்திய கோட்டினை சந்திக்கும் புள்ளி வரை, அந்தஇடத்தில் கொஸ்வத்த ஆற்றின் மத்திய கோட்டினூடாக மேற்கு திசைக்கு குகுலே ஆற்றின் மத்தி கோட்டினை சந்திக்கும் வரை;

மேற்கு : கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து குகுலேகம ஆற்றினை மத்திய கோட்டினூடாக, வடமேற்கு திசைக்கு கலவான மத்துகம பிரதான வீதியினூடாக மத்திய கோட்டினை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அந்த பிரதான வீதியின் மத்திய கோட்டினூடாக வடகிழக்கு திசைக்கு குகுலேகம – அயகம வீதியின் மத்திய கோட்டில் குறுக்குவெட்டு புள்ளியினை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அந்த வீதியின் மத்திய கோட்டினூடாக வடக்கு, திசையின் தொடக்க புள்ளியினை சந்திக்கும் வரை.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.